DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 323/ 2012 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 12 |
| Name | : ஆவுடையப்பன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2025.

--------

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர குற்றவியல் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். 21.07.2011 ம் தேதி நான் உசிலம்பட்டி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது உத்தப்பநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் செல்லப்பாண்டி என்பவர் உசிலம்பட்டி நகர் காவல் நிலைய கூடுதல் பொறுப்பில் இருந்த போது உசிலம்பட்டி நகர் காவல் நிலைய கு.எண்-434/2011 சட்டபிரிவு 294(பி), 307 , 506(2) இதச என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது மேல்விசாரணைக்கு வைத்ததை நான் அதை பெற்று கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ சாட்சிகளான ராமன், ராஜாராம் ஆகியோர் முன்னிலையில் 21.07.2011 ம் தேதி காலை சுமார் 6 மணிக்கு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வைமகஜர் அ.சா.ஆ-7 மற்றும் வரைபடம் அ.சா.ஆ-8 ஆகும். அந்த பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். பின்னர்

சம்பவ இடத்தில் காணப்பட்ட ரத்தகறை படிந்த நிப்போ பீம் லைட் என்ற விலாசமிட்ட பொருள்களை பேக்கிங் செய்ய பயன்படுத்தப்படும் பிரோன் கலர் அட்டை ஒன்று , மேலும் ரத்தகறை படிந்த சுமார் 4 அடி உயரமுள்ள வெள்ளை கலர் ஆர்சிச் என்ற பெயரிட்ட டியுப் லைட் பட்டி ஒன்று ஆகியவைகளை அன்று சுமார் காலை 7 மணிக்கு சாட்சிகளான ராமன், ராஜாராம் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி தயார்செய்து அதன்மூலம் பொருள்களை கைப்பற்றினேன். நான் தயார்செய்த அத்தாட்சி அ.சா.ஆ-9 ஆகும். மேற்படி தடயபொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். நான் தயார் செய்த படிவம் 91 அ.சா.ஆ-10 , கைப்பற்றப்பட்ட என்னிடம் காட்டப்படும் ரத்தகறை படிந்த நிப்போ பீம் லைட் என்ற விலாசமிட்ட பொருள்களை பேக்கிங் செய்ய பயன்படுத்தப்படும் பிரோன் கலர் அட்டை ஒன்று சா.பொ.8 , ரத்தகறை படிந்த சுமார் 4 அடி உயரமுள்ள வெள்ளை கலர் ஆர்சிச் என்ற பெயரிட்ட டியுப் லைட் பட்டி ஒன்று சா.பொ.9. ஆகும். பின்னர் சாட்சிகளான கே.கே.போஸ், கலாவதி, சுகப்பிரியா ஆகியோர்களை மதுரை அப்போலோ மருத்துவமனை சென்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு ராசாக்கிளி , ராதாகிருஷ்ணன், ராமன், ராஜாராம், டாக்டர் சாமுவேல் ராஜ், அரசு மருத்துவர் உசிலம்பட்டி, சார்பு ஆய்வாளர் செல்லபாண்டி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.07.2011 ம் தேதி சுமார் 14.15 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகளை பற்றி ரகசிய தகவல்கள் கிடைத்ததால் பேரையூர் ரோட்டில் , நல்லதேவன்பட்டி அய்யனார்கோவில் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று அப்போது அங்கிருந்த சாட்சிகளான சீமைச்சாமி, கண்ணன் ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கின் எதிரியான ஆனந்தராஜா என்பவரை 14.15 மணிக்கு கைது செய்து சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஆனந்தராஜா என்பவரை விசாரிக்க எவ்வித துன்புறுத்தலு மின்றி அச்சுறுத்தலுமின்றி தானாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்,. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால், சம்பவ இடத்தையும் , சம்பவத்தையும் பற்றியும் சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளையும்,

சம்பவத்தின் போது நான் உடுத்தியிருந்த ஆடைகளையும், மறைத்து வைத்த இடத்தை காண்பிக்கிறேன் என்று எதிரி சொல்லி , பின்பு அவர் சம்பவத்தின்போது ஓட்டி வந்த ஹீரோ ஹோண்டா ஸ்பிளண்டர் டி.எண்.58 U 4773 என்ற இருசக்கர வாகனத்தை என்னிடம் ஆஜர் செய்ததை 21.07.2011ம் தேதி சுமார் 11.45 மணிக்கு சாட்சிகளான சீமைச்சாமி, கண்ணன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து அந்த அத்தாட்சி மூலம் பொருள்களை கைப்பற்றினேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11. வாகனம் கைப்பற்றுவதற்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ.12. ஆகும். பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரியுடன் உசிலம்பட்டிக்கு நகராட்சிக்கு சொந்தமான மயானத்திற்கு அருகில் சுமார் 38 செ.மீ நீளமுள்ள அருவாள் ஒன்று , இரத்தகறை படிந்த கரும்பச்சை கலர் பேண்ட் ஒன்று, ரத்தகறை படிந்த பிங்க் கலர் சட்டையில் கட்டம்போட்ட முழுக்கை சட்டை ஒன்று, ரத்தகறை படிந்த வெள்ளை நிற முண்டா பனியன் ஒன்று ஆகியவைகளை முட்புதரில் மறைத்து வைத்திருந்தவைகளை சாட்சிகள் சீமைச்சாமி, கண்ணன் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை 21.07.2011ம் தேதி சுமார் 16.15 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அந்த அ த்தாட்சியில் பொருள்களை பெற்றேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ-13 ஆகும். பின்னர் 16.45 மணிக்கு எதிரி ஆனந்தராஜாவையும் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்புவித்து எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கு படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்திற்கு தயார் செய்யப்பட்ட படிவம் 91 அ.சா.ஆ-14 ஆகும். அருவாள், ரத்தகறை படிந்த பேண்ட், சட்டை, முண்டாபனியன் ஆகியவற்றிற்கு தயார் செய்யப்பட்ட படிவம் 91 அ.சா.ஆ.15 ஆகும். பின்னர் 25.07.2011ம் தேதி அத்தாட்சி கைப்பற்றிய சொத்துக்களை கனம் உசிலம்பட்டி ஜே.எண்,1 நீதிமன்றம் அனுப்பி ஆர்.பி.ஆர் நம்பர் 196/2011 பெற்று அச்சொத்துக்களை

**மதுரை தடய அறிவியல் துறைக்கு இராசாயண பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.16 ஆகும். 02.08.2011ம் தேதி இவ்வழக்கின் மற்றொன்று தலைமறைவு எதிரியான மீன்ராஜ் என்பவர் உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றுள்ளார். இவ்வழக்கில் காயமடைந்த கே.கே.போஸ் என்பவருக்கு சிகிச்சை அளித்த அப்போலோ மருத்துவமனை மருத்துவர் ஆர்.பி. ராஜேஷ்குமார் அவர்களை 01.09.2011ம் தேதி விசாரித்து அந்நபருக்கு சிகிச்சை அளித்த காயச்சான்று நகல் ஒன்று டாக்டரிடம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.112011ம் தேதி எனது புலன்விசாரணை முடித்து 1வது எதிரி மீது சட்டபிரிவு 294(பி), 307 இதச மற்றும் 2வது எதிரி மீது சட்டபிரிவு 506(2) இதச படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தின் போது உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையம், டவுன் காவல் நிலையம் ஆகியவைகளுக்கு வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். அப்போது எனது அலுவலகம் எங்கு இருந்தது என்றால் உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் இருந்தது. உசிலம்பட்டி நகர் காவல் நிலைய வளாகத்திற்கும், சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் அரை கி.மீ தூரம் இருக்கும். உத்தப்பநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் செல்லப்பாண்டிக்கு நான் எழுத்துபூர்வமாக இவ்வழக்கை விசாரிக்க உத்தரவு பிறப்பித்தேனா என்றால் வாய்மொழியாக உத்தரவு பிறப்பித்தேன். வாய்மொழி உத்தரவு இந்த வழக்கிற்காக எப்போது பிறப்பிக்கப்பட்டது என்றால் 19.07.2011ல் பிறப்பிக்கப்பட்டது. வழக்கு கோப்பில் அவ்வாறு பொறுப்பு வாய்மொழியாக கொடுக்கப்பட்டதற்கு ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. நான் சொன்னது போன்று, சொன்ன விதத்தில் உத்தப்பநாயக்கனூர் சார்பு ஆய்வாளர் செல்லப்பாண்டி உசிலம்பட்டி நகர் காவல் நிலைய பொறுப்பில் இருக்கவில்லை என்றாலும், அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. காயம்பட்ட நபர் நேரடியாக அரசு மருத்துவமனைக்கு சென்றால் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு மருத்துவமனையிலிருந்து தகவல் சொல்லப்படும் என்றால் சரிதான். அவ்வாறு வரும் தகவல்களை பதிவு செய்ய காவல் நிலையத்தில் அதிகாரிகள் இருப்பார்கள் என்றால்

அதிகாரிகளும் இருப்பார்கள், காவலர்களும் இருப்பார்கள். அதனடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று Intimation பெறப்படும் என்றால் விபத்து பதிவேடு தான் பெறப்படும். Intimation என்பது வேறு, விபத்து பதிவேடு என்பது வேறு என்றால் சரிதான். Intimation என்பது மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு அனுப்பப்படும் தகவல் ஆகும். விபத்து பதிவேடு என்பது காயம்பட்டவரை மருத்துவர் பார்க்கும்போது எழுதப்படும் குறிப்பு என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் காயம்பட்டவருக்கு எங்கு, யாரால் காயம் ஏற்பட்டது என்பதை சுருக்கமாக பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். Intimation என்பதிலும் காயம்பட்டவருக்கு எங்கு, யாரால் காயம் ஏற்பட்டது என்பதை சுருக்கமாக பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். இவ்வழக்கில் Intimation மற்றும் விபத்து பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக பெறப்பட்ட Intimation மற்றும் விபத்து பதிவேடும் வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் தாக்கல் செய்யப்படாமல் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சிடி கோப்பில் உள்ளது. Intimation மற்றும் விபத்து பதிவேட்டின் நகலை வைத்து மருத்துவரிடம் காட்டி வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். Intimation மற்றும் விபத்து பதிவேட்டு நகலும் ஒரு அசலாகவும், இரண்டு நகலாகவும் புத்தக வடிவில் இருக்கும் என்றால் சரிதான். அசலை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும், நகலை விசாரணைக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்றால் சரிதான். Intimation மற்றும் விபத்து பதிவேட்டின் அசலை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் ஒப்படைக்கவில்லை, மேற்படி நகல்கள் சிடி கோப்பில் உள்ளது. வழக்கு சம்மந்தமாக நான் உசிலம்பட்டி, தாலுகா காவல் நிலையத்தில் இருக்கும்போது அதிகாலை சுமார் 2.00 மணிக்கு தகவல் கிடைத்தது. நான் தகவல் கிடைத்தவுடன் சம்பவத்திற்கு போனோனா என்றால் போனேன். அப்போது சம்பவ இடத்தில் காயம்பட்டவர் இருந்தாரா என்றால் இல்லை. சம்பவம் இடம் போகும்போது அங்கு சம்பவத்தில் சொல்லப்படும் தடய பொருட்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன். வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளரை நான் அன்று அதிகாலை சுமார் 1.30 மணிக்கு உசிலம்பட்டி, தாலுகா காவல் நிலையத்தில் பார்த்தேன். உசிலம்பட்டி, தாலுகா காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு சுமார் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யும்போது சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் அங்கு உடனிருந்தார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.7

வரைபடத்தில் ஸ்டார் என்ற குறியீடு போஸ் எலக்ட்ரானிக்ஸ் கடைக்குள் என குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கடைக்கு வெளியே என காட்டப்பட்டுள்ளது. மேற்படி வரைபடத்தில் போஸ் கடைக்கு வாசலாக ஒரு கட்டம் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கட்டத்திற்குள் ஸ்டார் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கட்டத்திற்குள் ஸ்டார் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அது வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் தற்போது கடைக்கு வெளியே ஸ்டார் போடப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக சம்பவ இடத்தில் நடைபாதை இருந்தால் அதை தனியாக வரைபடத்தில் காண்பிக்க வேண்டும் என்றால் சரிதான். சிமெண்ட் தரையில் ரத்தம் படிந்திருந்தால், அதை தனியாக பெயர்த்து மாதிரிக்கு எடுத்து அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ரத்தக்கறை படிந்த சிமெண்ட் தரை இல்லை என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் போஸ் எலக்ட்ரானிக்ஸ் வராண்டா என தனியாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். போஸ் எலக்ட்ரானிக்ஸ் கடைக்கு அருகில் நெருக்கமாக கடைகள் உள்ளன என்றால் சரிதான். போஸ் கடைக்கு அருகில் உள்ள கடைக்காரர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் சம்பவம் நேரடியாக பார்க்கவில்லை என்பதாலும், சம்பவம் பற்றி தெரியாது என சொன்னதால் சாட்சியாக சேர்க்கவில்லை. வழக்கு சம்மந்தமாக சாட்சிகளை விசாரிக்கும்போது அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். சாட்சிகள் சம்பவத்தை பார்க்கவில்லை என சொன்னாலும், அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்ய வேண்டும் என்றால் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. அ.சா.ஆ.9 அத்தாட்சியில் பொருட்கள் எங்கு வைத்து கைப்பற்றப்பட்டது என்ற கலம் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் காயம்பட்டவரின் ரத்த வகையையோ, 1வது எதிரியின் ரத்த வகையையோ எடுத்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் பரிசோதனை செய்யவில்லை. எதிரியை கைது செய்யததாக சொல்லப்படும் நேரத்தில் கைது குறிப்பாணை ஒன்று தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கைது குறிப்பாணையில் எதிரின் இடது உள்ளங்கை ஆட்காட்டி விரலுக்கும், பெருவிரலுக்கும் இடையே ரத்தக்காயம் இருந்தது என குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரத்தக்காயம் சம்மந்தமாக மருத்துவரை விசாரித்தேனா என்றால் மருத்துவரை விசாரிக்கவில்லை. எதிரியை விசாரித்தேன். எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் கோவில் எங்குள்ளது என்றால் நல்லுத்தேவன்பட்டியில் உள்ளது. எதிரியை கைது செய்யும் போது சாட்சியாக இருந்தவர்கள் நல்லுத்தேவன்பட்டியை சார்ந்தவர்கள் இல்லையென்றால்

சரிதான். மேற்படி அய்யணார் கோயிலின் பூஜாரியையோ, ஊழியர்களையோ வழக்கில் சாட்சியாக சேர்க்க முற்பட்டேனா என்றால் அங்கு அப்போது யாரும் இல்லை. அ.சா.ஆ.16 நான் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களை தயட சோதனைக்கு அனுப்பப்பட்ட கடிதம் என்றால் சரிதான். மேற்படி அ.சா.ஆ.16 ஆவணத்தில் எங்கு வைத்து பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றும், வழக்கின் சுருக்கமும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரத்தக்கறை படிந்த நிப்போ ஹோம்லைட் ஆர்ச் என்ற டியூப் லைட் பட்டி சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.16ல் 3வது கலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அருவாளை சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நகராட்சி மயான சுடுகாட்டில் மயான ஊழியர்கள் இருப்பார்கள் என்றால் தெரியாது. நான் இந்த சம்பவத்திற்கு முன்பு மேற்படி மயானத்திற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். மேற்படி மயானம் அரசால் பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி மயானத்தை பராமரிக்க ஊழியர்கள் இருப்பார்கள் என்றால் தெரியாது. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றாலும், அதனடிப்படையில் சான்று பொருட்களை கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. படிவம் 91 புத்தக வடிவில் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி படிவம் 91 காவல் நிலையத்தில் தான் இருக்கும், வெளியில் கிடைக்காது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை, புகார், எதிரி கைதான ரிமான்ட் ரிப்போர்ட், பார்வை மகஜர், வரைபடம் அனைத்தும் 21.07.2011ம் தேதி மாலை 6.45 மணிக்கு உசிலம்பட்டி, நீதித்துறை நடுவருக்கு சென்றுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னவாறு, சொன்ன விதத்தில் இந்த வழக்கில் பார்வை மகஜரோ, வரைபடமோ, அத்தாட்சியோ, அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் தயார் செய்யப்படவில்லை என்றாலும், பின்னிட்டு வழக்கின் ஆவணங்கள் காவல் நிலையத்தில் தயார் செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருட்கள் அனைத்தும் 05.08.2011ம் தேதிதான நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு ஆர்பிஆர் எண் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.15 ஆவணத்தில் சான்று பொருட்களில் இடைச்செறுகலாக வார்த்தைகள் எழுதக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சான்று பொருட்களை சம்பவ இடத்தில் வைத்து தனித்தனியாக பிரித்து சீல் வைக்கப்பட்டதா என்றால் வைக்கப்படவில்லை, நிலையம் வந்து சீல் வைக்கப்பட்டது. சான்று பொருட்களை

நீதிமன்றத்திற்கு கொண்டு சென்ற காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அவரை பணியமர்த்தியதற்கு சிடி கோப்பு உள்ளது. அவ்வாறு பணியமர்த்த வேண்டுமானால் கடவுச்சீட்டு மூலம் தான் மேற்கொள்ள வேண்டும் என்றால் சரிதான். மேற்படி கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய புலன் விசாரணை கைப்பற்ற இருசக்கர வாகனம் யார் காவல் நிலையம் எடுத்து வந்தார் என்று குறிப்பு இல்லை என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தை சாவியை கைப்பற்றியதாக அத்தாட்சியில் குறிப்பு இல்லையென்றால் சரிதான். நான் சொன்னவாறு, சொன்ன இடத்தில் வைத்து எதிரியிடமிருந்து எந்த சான்று பொருட்களையும் கைபற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அ.சா.1 மற்றும் அவரது மகனை காப்பாற்ற உண்மை சங்கதிகளை மறைத்து எதிரிக்கு எதிராக சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் சம்பவம் நடந்த இடமாக போஸ் எலக்ட்ரானிக்ஸ் கடை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் போஸ் கடைக்கு முன்பு டேபிள் போடப்பட்டதாக குறிப்பு இல்லையென்றால் சரிதான். நான் சொன்னவாறு, சொன்ன இடத்திற்கு சென்று அங்கு வைத்து எந்தவொரு ஆவணங்களையும் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு ஏற்பட்ட காயங்களின் உண்மையாள காரணம் தெரியவந்தது என்றாலும் அது வழக்கிற்காக மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.07.10 14:36:17 +0530

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.